திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பணி மனையைப்போல அங்கு மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற நிலையம் இருக்கின்றதா? அப்படிப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பயிற்சி நிலையம் இருக்கிறதா என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. பணிமனையைப் பற்றியதுதான் கேள்வி. ஆகவே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

Rural Engineering Survey

* 80 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to launch a scheme of "Rural Engineering Surveys" which envisage collection of data of Agricultural Statistics; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? இந்த வருஷம் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. Now it is called the Drought Prone Area Programme. Originally it was named as Special Rural Works Programme. இப்போது தர்மபுரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இப்போது கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டம் ஒரு 'சீசனல் ஆக்டிவிட்டிஸ்' திட்டமாக இருக்கிறது. புரொடக்ஷன் பேசிசில் (Production oriented) இல்லை. அதனால் இந்தத் திட்டம் பிரயோஜனமாக இல்லை. ஆகவே, உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட திட்டமாக மாற்றி, ஆழ்குழாய்க் கிணறுகள், பாசன வசதி போன்ற திட்டங்களாக மாற்றிச் செயல்படுவதற்கு மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா ?

@ 122-124-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட திட்டம்தான். முதலில் புள்ளி விவரங்களை சேகரித்துக்கொண்டிருக்கிருர்கள். அதன் பிறகு மற்ற திட்டங்கள் உருவாகும்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the allotment made for Dharmapuri district under the Drought Prone Area Programme and also whether there is any proposal to increase the amount?

THE HON. THIRU P. U. SHANMUGAM: The Scheme is launched by the Central Government. We are executing the Scheme. We have no funds to expand it or enlarge it.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் இராமநாத புரம் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத்தையும் சேர்த்திருப்பதாகச் சொன் ஞர்கள். கோவை மாவட்டத்தில் பல்லடம், தாராபுரம் பகுதிகள் மிகவும் வறட்சியான பகுதிகளாக இருக்கின்றன. கோவை மாவட்டத்திலுள்ள இந்த இரண்டு தாலுகாக்களையும் இந்தத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது நான் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அல்ல. மத்திய அரசுதான் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்தை முதலில் சேர்த்திருந்தார்கள். இரண்டாவதாக தர்மபுரி மாவட்டத்தைச் சேர்த்துக்கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தை விட்டுவிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டோம். இந்தத் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் செலவு ஆகும். ஆகவே, இரண்டு கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு தருவதாக இருந்தால் இரண்டு மாவட்டங்களையும் சேர்த்துக்கொள்ள லாம் என்று சொல்லியிருக்கிருர்கள். அரசு அதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, நம்முடைய தமிழக அரசு பல்லடம், அவிஞசி, தாராபுரம் ஆகிய வட்டங்களையும் இதில் சேர்த்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது மத்திய அரசின் திட்டம். தமிழக அரசிடம் அப்படி ஒரு திட்டம் இல்லை.